# MOST INNOVATIVE ENVIRONMENT PROJECT AWARD TO TNPL

Confederation of Indian Industry Sohrabji Godrej Green Business Centre (CII-GBC) – organized 9th edition of the CII – Environmental Best Practices Award 2022 and invited application from various industry and service sectors including TNPL for the above award. "**Restoration and Conservation of Bio-Diversity and Conservation of High Conservation Value Forest in TNPL Unit#2"** Project was submitted by TNPL for CII Environmental best practical award 2022.

On behalf of TNPL, Team consists of Dr. R. Seenivasan, CGM (Plantation and R & D)-Team Leader, Dr. S. Chinnaraj, DGM (R&D and QC)-Team Member and Mr. T. Vijayakumar, Assistant General Manager (Laboratory) - Team Member submitted information in the prescribed questionnaire for the above award.

170 projects from various Companies were received by CII- GBC for Environmental Best Practices Award 2022. Among the submitted projects, CII-GBC short listed 17 projects from various industry and service sectors. TNPL's Project "**Restoration and Conservation of Bio-Diversity and Conservation of High Conservation Value Forest in TNPL Unit#2"** is one among them.

All the 17 companies are invited to make a presentation before the panel of experts on 14th Sep 2022, at Hyderabad.

TNPL team consists of Dr. R. Seenivasan, CGM (Plantation and R & D)-Team Leader, Dr. S. Chinnaraj, DGM (R&D and QC)-Team Member and Mr. Wilson Kenndey Assistant Manager (Plantation)made presentation at 9th edition of the CII – Environmental Best Practices Award 2022 on 14th Sep 2022.

Out of 17 short listed projects, TNPL's project is one among the 9 projects selected as **"Most Innovative Environment Project"** during CII – Environmental Best Practices Award 2022.



**<u>தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன அலகு 2 - சிஐஐ சுற்றுச்சூழலில் சிறந்த நடைமுறைகளுக்கான விருது 2022</u>**

இந்திய தொழில் துறை பசுமை வணிக மையத்தின் கூட்டமைப்பு சிஐஐ சுற்றுச்சூழலில் சிறந்த நடைமுறைகளுக்கான விருது 2022இன் 9 வது பதிப்பை ஏற்பாடு செய்தது. இதன் ஒரு பகுதியாக சுற்றுச்சூழல் சிறந்த நடைமுறைகளுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு தொழில் மற்றும் சேவைத்துறைகளுக்கு அழைப்பு விடுத்தது,

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அலகு 2-ல் அமல்படுத்தப்பட்ட "பல்லுயிர் பெருக்கத்தின் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்புத்திட்டம்" சிஐஐ சுற்றுச்சூழலில் சிறந்த நடைமுறைகளுக்கான விருது 2022ற்க்காக சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் முனைவர் இரா.சீனிவாசன் முதன்மை பொதுமேலாளர் (வனம் மற்றும் ஆராய்ச்சி & அபிவிருத்தி) குழுவில் தலைவர், முனைவர் செ.சின்னராஜ் (துணை பொதுமேலாளர் ஆராய்ச்சி & அபிவிருத்தி மற்றும் தரக்கட்டுப்பாடு) உறுப்பினர், திரு.து.விஜயகுமார் உதவி பொதுமேலாளர் (ஆய்வகம்) உறுப்பினர் ஆகியோர் அடங்கிய குழு மேற்கண்ட விருதிற்க்காக கொடுக்கப்பட்ட கேள்வித்தாளில் உரிய திட்ட தகவல்களை சமர்ப்பித்தனர்.

சிஐஐ சுற்றுச்சூழலில் சிறந்த நடைமுறைகளுக்கான விருது 2022ற்காக சிஐஐ – க்கு 170 திட்டங்கள் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து சமர்ப்பிக்கப்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களில், சிஐஐ பல்வேறு தொழில் மற்றும் சேவைத் துறைகளைச் சேர்ந்த 17 திட்டங்களை உரிய ஆய்வுக்குப்பின் தேர்ந்தெடுத்தது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சமர்ப்பித்த "பல்லுயிர் பெருக்கத்தின் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு'' என்ற திட்டமும் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 திட்டங்களில் ஒன்றாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 17 திட்டங்கள் மற்றும் அதற்குரிய நிறுவனங்களும் 2022 செப்டம்பர் 14 அன்று ஐதராபாத்திற்கு நிபுணர்கள்குழு முன் விளக்கமளிக்க அழைக்கப்பட்டன.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் குழுவில் தலைவர் முனைவர் இரா.சீனிவாசன் முதன்மை பொதுமேலாளர் (வனம் மற்றும் ஆராய்ச்சி & அபிவிருத்தி), முனைவர் செ.சின்னராஜ் (துணை பொதுமேலாளர் ஆராய்ச்சி & அபிவிருத்தி மற்றும் தரக்கட்டுபாடு) குழு உறுப்பினர், திரு.வில்சன் கென்னடி (துணைமேலாளர்) குழு உறுப்பினர் ஆகியோர்களால் திட்டமானது சிஐஐ சுற்றுச்சூழலில் சிறந்த நடைமுறைகளுக்கான விருது 9வது பதிப்பிற்காக 14 செப்டம்பர் 2022 அன்று விளக்கப்பட்டது.

மேற்கண்ட நேர்முக விளக்ககாட்சியை வழங்கிய 17 தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களில் 9 திட்டங்கள் மிகவும் புதுமையான சுற்றுசூழல் திட்டமாக சிஐஐ சுற்றுச்சூழலில் சிறந்த நடைமுறைகளுக்கான விருது 2022ற்க்காக

தேர்ந்தெடுக்கப்பட்டது. அவற்றுள் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் திட்டமும் ஒன்றாகும்.

